**நி.ம.எண்.158/2025**

**ம.சா.1 : கந்தசாமி**

**தேதி : 06.04.2026**

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிர்மனுதாரருக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல, அவருக்கு வீடு மற்றும் நிலம் உள்ளது, அவருக்கு மாதம் ஒரு இலட்சம் ரூபாய் வருமானம் உள்ளது. எதிர்மனுதாரர் நடத்தி வரும் பேக்கரியின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. எதிர்மனுதாரர் பேக்கரி நடத்தி வருகிறார் என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் பைனான்ஸ் தொழில் செய்து வருவதாக சொல்லியுள்ளீர்கள், பைனான்ஸ் பெயர் என்ன என்றால் சண்முகா ஆண்டவர் பைனான்ஸ், நானும், எதிர்மனுதாரரும் பங்குதாரர்களாக உள்ளோம். அதற்குண்டான ஆவணம் தாக்கல் செய்யவில்லை, ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலும். எதிர்மனுதாரர் எந்தவொரு தொழிலும் செய்யவில்லை என்பால்தான் நீங்கள் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஒரு இலட்சம் ரூபாய் சம்பாதிப்பதாக

சொல்லியுள்ளதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மோட்டார் சைக்கிள் கடை வைத்துள்ளதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாருக்கு வீடு மற்றும் இதர சொத்துக்கள் இருப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள தொகையை செலுத்த எதிர்மனுதாரருக்கு எந்தவொரு தொழிலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்த வகையில் சம்பாதிக்கிறார் என்ற விபரம் தெரியாததால்தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாவா தொகை செலுத்தும் அளவிற்கு பொருளுதவியோ, தொழிலோ இல்லாத காரணத்தினால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.06 17:10:48 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.